# தீவிரவாதத்தை ஒழிக்கும் ஆயுதம்: மக்கள் சக்தி

தமிழவேல்

உச்ச நேரத்தில் ஷென்டன் வேயில் வெடிகுண்டு வெடிக்குமென்றால், குண்டு வெடித்த பிறகு செயல்படுவதல்ல சிங்கப்பூரின் சித்தாந்தம். அந்த குண்டு வெடிப்பதற்கு வெகு நாட்கள் முன்னரே அதைத் தடுத்து நிறுத்துவதே சிங்கப்பூரின் வழிமுறையாக இருக்கும்.

பேரிடர் காலத்தின் போது சிங்கப்பூரர்கள் அனைவரும் தயார் நிலையில் இருப்பார்கள் என துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான வோங் கான் செங் நேற்று கூறினார்.

இதை நடைமுறைப்படுத்திய சமூக ஈடுபாட்டுத் திட்டத்தின் பலம் பற்றி விவரித்த துணைப் பிரதமர் "சிங்கப்பூரர்கள் எப்போதும் உச்ச விழிப்பு நிலையில் இருக்கவேண்டும்," என்றார்.

"சிங்கப்பூரில் தீவிரவாத, பயங்கரவாத மிரட்டல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும். அதை எதிர்க்க சிங்கப்பூரர்கள் உச்சத் தயார் நிலையில் இருப்பார்கள், என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்," என்றும் துணைப் பிரதமர் கூறினார்.

தற்சமயம் சிங்கப்பூரின் 30 குழுத் தொகுதிகள் பேரிடர் காலத்தின்போது சமூக ஈடுபாட்டுத் திட்டத்தின் தயார் நிலையில் இருப்பதற்கான சான்றிதழ் பெற்றிருக்கின்றன.

இவ்வாண்டின் இறுதிக்குள் சிங்கப்பூரின் 84 தொகுதிகளும் இந்த சான்றிதழைப் பெற மக்கள் கழகம் பாடுபடுகிறது என திரு வோங் சொன்னார்.

பேரிடர் காலத்தின் போது இன, மதப் பிரச்சினைகளைத் தடுக்கும் நிகழ்ச்சிகளை நடத்தும் சமூகத் தலைவர்களை உருவாக்க உருவானது சமூக ஈடுபாட்டுத் திட்டம்.

கடந்த 2005ம் ஆண்டின் லண்டன் குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து சிங்கப்பூரர்களை மனரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒறுமைப்படுத்த பிரதமர் லீ சியன் லூங் இத்திட்டத்தைப் அறிமுகப்படுத்தினார்.

இத்திட்டத்தின் மூலம் கல்வி, அடித்தள அமைப்புக்கள், காவல், கலை போன்ற பல துறைகளைச் சேர்ந்த சமூகத் தலைவர்கள் சமரசப் பயிற்சி, ஒருங்கிணைக்கும் பயிலரங்குகள், ஒற்றுமை வளர்க்கும் திட்டங்கள் ஆகிய பல பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.

பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், அடித்தள அமைப்புத் தலைவர்கள், ஊடகங்கள் மூலம் பல நிலைகளிலும் மக்களை அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வைத்திருக்கிறது

> ‘வெளிநாட்டு ஊழியர்களில் பலர் ஏழ்மையான நிலையிலிருந்து வந்தவர்கள். இவர்களும் தீவிரவாதிகளின் இலக்காகக்கூடும். இந்தச் சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள் மூலம் இவர்களை ஒருமைப்படுத்த முடிகிறது.’
>
> **-திரு. கசாலி பின் சையது மைதீன், 48**
> மினி என்வைரன்மன்ட் சர்வீசஸ்,
> ஜூரோங் பஞ்சூரு விடுதி நிர்வாகி

இத்திட்டம்.

நாடகங்கள் மூலம் சமூக ஒற்றுமையை எடுத்துரைக்கும் 'கம்போங் ஸ்பிரிட் அட் யூனோஸ்' திட்டம், சமய நல்லிணக்க மையத்தின் பல இன ஈடுபாட்டு உரை யாடல் திட்டம் போன்ற பல திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன என்று துணைப் பிரதமர் கூறினார்.

அடிப்படை தயார் நிலையைப் பெற்றிருக்கும் தொகுதிகளும் காலப் போக்கில் அந்நிலையை இன்னும் மேம்படுத்திக் கொள்ளும் என்றார் அவர்.

இவ்வாண்டு இளையர்களும் இத்திட்டத்தில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு வோங் கூறினார்.

ஆர்கட் கன்ட்ரி கிளப்பில் நடைபெற்ற தேசிய சமூக ஈடுபாட்டுத் திட்டப் பயிலரங்கில் நேற்று அமைச்சர்கள், அடித்தள அமைப்புத் தலைவர்கள், ஊடகப் பிரதிநிதிகள், கலைஞர்கள், தொழில் முனைவர்கள், மாணவர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

> ‘கலைகளுக்கு எந்த பேதமும் இல்லை. அனைத்து விதமான மக்களுக்கும் சேர்கிறது. மக்களை ஒருங்கிணைக்க உதவும் கலைகளும் தீவிரவாதத்தைத் தவிர்க்க உதவும் ஒரு சிறந்த கருவி.’
>
> **- திரு கே.பி.பாஸ்கர், 84**
> மூத்த கலைஞர், நிருத்யாலயா கவின் கழகம்,
> பாஸ்கர்ஸ் ஆர்ட்ஸ் அகாடமி நிறுவனர்,

## சிங்கப்பூரே சிறந்த வழிகாட்டி

"பயத்திற்கு அடிமையானவர்களின் மனம் எளிதில் குழப்பத்திற்கு உள்ளாகிவிடும்.

ஒரு சமூகத்தின் குறைபாடுகளைத் தன்னலத்திற்காகப் பயன்படுத்தி குழப்பத்தை உண்டாக்கி சமூகக் கட்டமைப்பை ஊடுருவப் பார்க்கின்றனர் பயங்கரவாதிகள்.

மனப்பக்குவம் அடையாத இளையர்களிடம் மோட்சம் பெறக்கூடும், தியாகி ஆகக்கூடும், பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும் எனும் தவறான கருத்துக்களைத் திணித்து தீவிரவாதத்தை அறிமுகப்படுத்தி, அவர்களைத் தற்கொலை புரியும் பயங்கரவாதிகளாக மாற்றுகின்றன பயங்கரவாத அமைப்புகள்.

இது போன்ற பயங்கரவாதத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் மக்களின் ஒற்றுமையே.இந்த ஒற்றுமையை வளர்க்கும் தொலை நோக்குத் திட்டம்தான் சிங்கப்பூரின் சமூக ஈடுபாட்டுத் திட்டம்.

இது போன்ற சிறந்த திட்டம் உலகில் வேறு எங்கும் நான் பார்த்ததில்லை. இத்திட்டத்தைப் பல நாடுகளும் பின்பற்ற ஆர்வமாக உள்ளன.

பயிலரங்கில் உரையாற்றியவர் நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பேராசிரியரும், அரசியல் வன்முறை, பயங்கரவாத ஆய்வுக்கான சிங்கப்பூரின் அனைத்துலக மையத்தின் தலைவருமான திரு ரோஹன் குணரட்னா.